**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.128** **நாள்: 12.06.2025**

**நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் ரிப்பன் கட்டட வளாகத்தில் அமைக்கப்பட்ட நான்காண்டு சாதனை புகைப்படக் கண்காட்சியினை பள்ளி மாணவ, மாணவியர் உள்ளிட்ட பொதுமக்கள் ஆர்வமுடன் இன்று பார்வையிட்டனர்.**

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை குடிநீர் வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகராட்சி நிருவாக இயக்குநரகம், பேரூராட்சிகளின் ஆணையரகம் ஆகியவற்றின் வாயிலாக தமிழ்நாடு முழுவதும் கடந்த 4 ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் சாதனைகளை விளக்கும் புகைப்படக் கண்காட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் அமைக்கப்பட்டு 11.06.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இந்தப் புகைப்படக் கண்காட்சியில் நகர்ப்புர பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாலங்கள், சாலைகள், பள்ளி, மருத்துவமனை, சமுதாயக் கூடம், அலுவகம் உள்ளிட்ட பல்வேறு கட்டடங்கள், மழைநீர் வடிகால்கள், குடிநீர் திட்டப்பணிகள், பாதாளச் சாக்கடைத் திட்டப்பணிகள், கழிவுநீரகற்றும் கட்டமைப்புகள், பேருந்து நிலையம், திடக்கழிவு மேலாண்மை, அறிவுசார் மையங்கள், வாரச்சந்தை, தினசரி சந்தை, சென்னை பள்ளியில் மேற்கொள்ளப்பட்டு வரும் கல்வி, விளையாட்டு நடவடிக்கைகள், மாற்றுத்திறனாளிகள் நடைபாதை, நவீன மீன் அங்காடிகள், உடற்பயிற்சிக் கூடம், திறன் மேம்பாட்டுப் பயிற்சி மையம், உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளின் சாதனைகள் இடம் பெற்றுள்ளது.

இந்தக் கண்காட்சியினை சென்னை பள்ளி மாணவ, மாணவியர், மாநகராட்சி பணியாளர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் இன்று (12.06.2025) ஆர்வமுடன் பார்வையிட்டனர். இந்தக் கண்காட்சியானது 17.06.2025 அன்று வரை நடைபெறுகிறது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி.**